# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசரியா- சென்னை, வில்சன் மேரி, , ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி,ஜெயசேகரி -கொடைக்கானல், ஜெரின் மேரி - திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், இரஞ்சிதம், லில்லி இஸபெல்லா மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், ஆக்னஸ் ரோசாள் மேரி, அர்மெல்லா - கன்னியாகுமரி,

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயம்பத்தூர், சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன் - தூத்துக்குடி.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**அருட்சகோதரி. லில்லி புஷ்பம் -தஞ்சாவூர்**
**திருமதி. G. S. பாத்திமா - திருச்சி**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# காட்சிகள்

## பதிப்பாசிரியர் பக்கம்


ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே, அன்னை மரியின் பக்தர்களே, விண்ணேற்பு அடைந்த நம் அன்னை மரியாள் விண்ணுலக மண்ணுலக அரசியாக முடிசூட்டப்பட்ட பிறகு தம் இருப்பிடத்தை விண்ணகத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தொடர்ந்து மண்ணுலகோடு ஏதோ ஒரு விதத்தில் தன்னை தொடர்புபடுத்திக்கொண்டே இருந்தார். பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு இடங்களில் பலதரப்பட்ட மக்களுக்கு காட்சிக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றார். அன்னை மரியாளின் தரிசனம் கிடைக்காதா என்று மக்கள் கூட்டமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அன்னை மரியாளின் காட்சிக் காணதான் கபிரியேல் வானதூதர்கூட ஆவல் கொண்டார்.

இஸ்ரயேலில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள், மிகவும் பிரபலம் வாய்ந்த ஊர்களில் பிறந்த எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள், மாடமாளிகையில் பிறந்த எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள், அரசக் குடும்பத்தில் பிறந்த எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள், ஞானியர் கூட்டத்தில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள், மிகவும் தூய்மையான கலப்பில்லாத யூதர்கள் வாழும் பகுதியான யூதேயாவில் பிறந்த எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள் அத்தனை பேரையும் விட்டுவிட்டு அதிகம் பிரபலம் ஆகாத ஊரான நாசரேத்தில் பிறந்த மரியா என்ற சாதாரண பெண்மணியைக் காணதான் ஆண்டவரின் தூதர்கூட ஆசைப்பட்டார்.



## உள்ளே




கதையினில் கலந்த மரியா - 05
குணமளிக்கும் லூர்து அன்னை - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
வியப்புக்குரிய அன்னையே - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

ஆண்டவரின் தூதரே காண ஆசைப்படும் அளவுக்கு அவரிடம் என்ன சிறப்புதான் இருந்தது. அந்த சிறப்பு என்னவென்றால் கடவுளின் அருளைக் கண்டடைந்ததுதான். நம் கடவுள் மனிதர்களை அன்பு செய்கின்ற கடவுள், நான் அன்பு செய்கின்றேன் என்று அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது கிடையாது. அதுபோல மனிதர்கள் அனைவரையும் படைத்தவரும் அவர்தான், நான் படைத்துவிட்டேன் அதனால் எனது ஆசைகளை அவர்கள்மீது திணிப்பேன் என்பதும் கிடையாது. நம் கடவுள் மனிதர்களை மதிக்கின்ற கடவுள் மனித மாண்புகளை காக்கின்ற கடவுள். மனித உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற கடவுள். மனிதர்களுக்கு சுதந்திரம் கொடுக்கின்ற கடவுளாக அவர் இருப்பதால், என்னதான் அன்னை மரியாளை தனது பணிக்காக தேர்ந்து கொண்டாலும் அவருக்கு அதில் விருப்பம் இருக்கின்றதா என்று வினவுகின்றார், ஆம் என்று சொன்னபிறகுதான் தன் பணிக்காக அனுப்பி வைக்கின்றார். நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன் என்று சொன்னவர் நம்மையும் அவருடைய பணிக்காக தேர்ந்துகொண்டிருக்கின்றார்.

தன்னைத் தேர்ந்து கொண்ட கடவுளுக்கு அன்னை என்றும் பிரமாணிக்கமாக இருக்கின்றார். அந்த பிரமாணிக்கத்தின் அடையாளம்தான் அன்னை மண்ணுலக மக்களுக்கு கொடுக்கும் காட்சிகள். அன்னை மக்களுக்கு கொடுக்கும் காட்சிகள் தன்னை முன்னிலைப்படுத்த அல்ல, தன்னை பிரபலப்படுத்தவும் அல்ல, கடவுளின் கருணையை வெளிப்படுத்த. கடவுள் படைத்த மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்வதற்கு. அதனால்தான் நம் அன்னை பிரான்ஸ் நாட்டில் இருக்கக் கூடிய லூர்து என்ற நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு காட்சிக் கொடுக்கின்றார். ஒருமுறை இரண்டுமுறை அல்ல மொத்தம் 18 முறை காட்சிக் கொடுக்கின்றார். இந்தக் காட்சிகளின் மூலம் அன்னை விடுக்கக்கூடிய அழைப்பு என்னவென்றால் பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்பதுதான். எப்படி எத்தனையோ பெண்கள் இஸ்ரயேல் கலாச்சாரத்தில் இருக்கும்போது கடவுள் அன்னை மரியாளைத் தேர்ந்து கொண்டாரோ அதுபோல எத்தனையோ நாடுகளில் எத்தனையோ மக்கள் இருக்கும்போது அன்னை மரியாள் காட்சிக் கொடுப்பதற்கு மிகவும் சாதாரணமான சிறுமியான பெர்னதெத்தை தேர்வு செய்து அவருக்கு 18 முறைக் காட்சிக் கொடுத்தார்.

அன்னை மரியாள் பெர்னதெத்துக்கு காட்சிக் கொடுக்கும்போது ஒருமுறை காட்சிக் கொடுத்திருக்கலாம், இல்லையென்றால் இரண்டுமுறை காட்சிக் கொடுத்திருக்கலாம் ஆனால் அவர் 18 முறை காட்சிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? சாதாரண பாமர படிப்பறிவு குறைந்த சிறுமிக்கு காட்சிக் கொடுப்பது அன்னை மரியாள்தான் என்பதை புரிய வைப்பதற்கு அவர்களுக்கு பலமுறை காட்சிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் காட்சிகள் மூலம் அன்னை மரியாள் இந்த உலகிற்கு உரக்கச் சொல்லக்கூடியது என்னவென்றால் மண்ணுலகில் வாழக்கூடிய மக்களுக்கு நான் தொடர்ந்து உதவி செய்வேன் என்பதாகும்.

**காட்சிகள் பல கொடுக்கின்றாள் அன்னை**
**நம்மை சாட்சிகளாக மாற்றுவதற்கே**





குழந்தை ஒரு பெண் குழந்தை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பிலோமின் குயின் மேரி – செம்மஞ்சேரி**

என்னுடைய தங்கைக்காக நான் இங்கு வந்தேன். என் தங்கைக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது குடல் வெளியே வந்துவிட்டது. அது சரியாக மருத்துவர்கள் சிகிச்சை செய்யாத காரணத்தினால் வலி வேதனையால் அவள் அவதிப்பட்டாள். நான் இங்கு அன்னையிடம் வந்து ஜெபித்து அதன் பின்பு இரண்டு மாதங்கள் கழித்து அவளுக்கு திரும்பவும் அறுவை சிகிச்சையானது நல்ல முறையில் செய்யப்பட்டு இப்பொழுது அவள் நல்ல சுகத்தோடு இருக்கிறாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெயசுதன் - சோழிங்கநல்லூர்**

15 ஆண்டுகள் இங்குதான் இருக்கிறோம். முதல் முறையாக 2009 ஆம் ஆண்டு என்னுடைய மாமியார் எங்களுக்கு குழந்தை வரம் வேண்டி ஆலயத்திற்கு வந்தார்கள். வந்த ஒரே மாதத்தில் என்னுடைய மனைவி கருவுற்று 2010 ல் ஒரு அழகிய குழந்தையை பெற்றார்கள். நான் வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். ஆண்டவருடைய கிருபையினால் 2018ஆம் ஆண்டு ஆலயத்திற்கு பக்கத்திலேயே எங்களுக்கு ஒரு வீடு கொடுத்து இங்கு வேலையும் அமைத்துக் கொடுத்தார். அதன்பின்பு ஆறு மாதங்களுக்கு முன்பாக என்னுடைய நண்பருக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று நினைத்தேன், அவருக்கு நான் ஒரு பணியைப் பெற்றுக் கொடுத்து, இப்பொழுது பணியானது மேன்மைப்படுத்தப்பட்டுள்ளது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜனவரி மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். அன்றுதான் ஜீவ மாதா திருநாளும் கொண்டாடப்பட்டது. பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**றீனா ஆண்றணி ராஜ் - ஒக்கியம்பேட்டை**

கடந்த ஜீலை மாதம் எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. ஆதலால் என்னால் நடக்க முடியவில்லை. அதன்பின் ஆகஸ்டு மாதம் நவநாளை நான் ஆண்டவரே பேசும் வலைத்தளத்தின் மூலமாக கண்டேன். அப்பொழுது தியானத்தின்போது நான் அழுது ஜெபித்தேன், நான் நன்றாக நடக்க வேண்டுமென்று. அதேபோல் ஆண்டவர் எனக்கு இப்பொழுது சுகம் கொடுத்துள்ளார். என் மகனுக்கும் ஸ்கின் அலர்ஜி இருந்து கொண்டே இருந்தது. அதன்பின்பு அதையும் ஆண்டவர் சுகப்படுத்திக் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கார்த்திகா, பேசில் - பெரம்பூர்**

நான் இந்த ஆலயத்திற்கு எனக்கு சுகப்பிரசவம் வேண்டி வந்தேன், மருத்துவர்கள் 35 வயதில் சுகப்பிரசவம் நடப்பது கடினம் என்று கூறினார்கள். ஆனால் குழந்தையின் எடை 3 கிலோ இருந்தது. அதன்பிறகு குழந்தையின் எடை 4 கிலோவாக உயர்ந்தது, சுகப்பிரசவமும் ஏற்பட்டது. ஆண்டவர் எனக்கு பெண் குழந்தையைக் கொடுத்தார். அதன் பின்பு என் கணவருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. நான் மரியன்னையிடம் மன்றாடினேன். எனக்கும் என் கணவருக்கும் வேலை வேண்டுமென்று, அதேபோன்று என் கணவருக்கு மார்ச் மாதம் வேலை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**அமலா, அருண் – நெமிலிச்சேரி, பட்டாபிராம்**

எனக்கு திருமணமாகி ஐந்து வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. நான் குழந்தை இயேசு ஆலயத்தைக் குறித்து அறிந்து ஜீவ அன்னையை தேடி 5 மாதங்கள் வந்தேன். மூன்று மாதங்களுக்கு முன்னால் நான் கருவுற்றேன். எனக்கு ஆண்டவர் இரட்டிப்பான மகிழ்ச்சிக் கொடுத்து எனக்கு இரட்டைக் குழந்தைகளைத் தந்தார். ஒரு ஆண்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு ஏழை விவசாயி இருந்தார். அவர் ஒரு குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் திடீரென்று நோய்வாய்ப்பட்டான். மருத்துவ செலவிற்கு போதிய வசதி இல்லை. அந்த நாட்டின் அரசனை சந்தித்து உதவி கேட்கலாம் என நினைத்தார். அரசனுக்கு பிடித்த பரிசு பொருளை கொண்டு சென்றால்தான் அரண்மனைக்குள் நுழைய முடியும். ஆனால் இந்த ஏழை விவசாயிடம் இருந்தது வெறும் மூன்று மாம்பழம், இதை எடுத்துக் கொண்டு சென்றனர், ஆனால் அரசனை பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று அறியாமல் குழம்பிபோய் இருந்தனர். அப்போது அந்த வழியில் அரசனின் தாயார் உலா வருவதைப் பார்த்து ஓடி சென்று சந்தித்தனர், தங்களது குடும்பச் சூழ்நிலையை எடுத்துச் சொன்னார்கள். அரசனுக்கு தாங்கள் கொண்டு வந்த மூன்று மாம்பழங்களையும் தாயாரிடம் அளித்தனர். அவர் அரண்மனைக்குள் சென்று, ஒரு தங்கப் பாத்திரத்தை எடுத்து அதற்குள் வைர முத்துக்களை நிரப்பி அதன்மேல் மூன்று மாம்பழங்களையும் வைத்து அரசனிடம் கொண்டு கொடுத்து ஒரு விவசாயி இதை உனக்குக் கொடுக்கச் சொன்னார், அரண்மனையின் வெளியே உன்னை சந்திக்க காத்து கொண்டு இருக்கிறார் என்று சொன்னார். ஒரு விவசாயி எனக்காக மிகவும் விலைமதிப்புமிக்க பரிசை கொண்டு வந்திருக்கிறேன் என்று மகிழ்ந்தான். அரசன் அவரை உள்ளே அழைத்து வாருங்கள் என்று ஆணையிட்டான். விவசாயி வந்ததும் என்ன வரம் வண்டும் என்று கேட்டான். தன்னுடைய குடும்ப சூழ்நிலையை விளக்கி சொன்னார் விவசாயி. இவ்வளவு வறுமையிலும் கஷ்டத்திலும் எனக்கு பரிசு பொருட்கள் கொண்டு வந்திருக்கிறாய். ஆகவே உனக்கு நான் உதவி செய்கிறேன் என்றார் அரசன். அரசன், விவசாயிடம் அரசவை மருத்துவர்கள் உம்முடைய மகனின் நோயை குணப்படுத்தினார்கள், அதுவரை அரண்மனையில் நீரும் உம் குடும்பத்தாரும் தங்கியிருக்கலாம் என்று கூறினான்.

நமது வழிகள் அடைக்கப்படும்போது அன்னை ஒரு புதிய வழியை நமக்கு உருவாக்குகிறாா். கானாவூா் திருமணதத்தில் இரசம் தீா்ந்து போனபோது மரியாள் தாமாக முன்வந்து உதவி செய்தாா். சாதாரண ரசத்தை அருந்தியவா்கள் நல்ல ரசத்தை அருந்தினாா்கள். எங்கெல்லாம் அன்னையின் பரிந்துரையும் தூண்டுதலும் இருக்கிறதோ அங்கெல்லாம் வல்ல செயல்கள் நிகழும். அன்னையின் தூண்டுதல் இருக்கும்போது நம்முடைய சிந்தனை நல்ல சிந்தனையாகவும் நம்முடைய செயல் நல்ல செயலாகவும் வடிவம் பெறுகிறது. ஆகவே அன்னையின் பரிந்துரையை நாடுவோம் நல்ல மனிதா்களாக மாறுவோம்.

# குணமளிக்கும் லூர்து அன்னை

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

இறைமகன் இயேசுவின் அன்னை, நமது அன்னை. அவர் தனது மகனை இறைவனுக்கு உகந்தவராக வளர்த்துக் காத்தது போன்று, அவர் தம் மக்களாகிய நம்மையும் அன்புடனும் அக்கறையுடனும் பேணி வருகிறார். நமக்காக தன் மகனிடம் பரிந்துரை செய்கிறார். நம்மையும் இறைவேண்டல் புரியத் தூண்டுகிறார். சிறப்பாக செபமாலை செபித்து இயேசுவின் வாழ்வைத் தியானிக்க அழைக்கின்றார். 'அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று நம்மை பணிக்கின்றார். திருஅவை அன்னை மரியாவுக்கு ஒவ்வொரு மாதமும் சிறிய, பெரிய விழாக்கள் எடுத்து மகிழ்கின்றது. பிறக்கவிருக்கும் பெப்ருவரி மாதத்தில் இரு விழாக்கள் சிறப்பிக்கப்படவிருக்கின்றன. இரண்டாம் நாள் குழந்தை இயேசுவை அவர் பிறந்த 40 ஆம் நாள் கோவிலில் அர்ப்பணித்த விழாவையும், 11 ஆம் நாள் லூர்து அன்னையின் விழாவையும் கொண்டாடுகின்றோம். முதல் விழா அகில உலக அர்பணிக்கப்பட்டோரின் விழாவாகவும் இரண்டாவது விழா அகில உலக நோயுற்றோர் தினமாகவும் அனுசரிக்கப்படுகின்றன. இக்கட்டுரையில் மரியா எவ்வாறு குணமளிக்கும் தாயாக ஒவ்வொரு நோயாளியின் மீதும் பாசத்துடன் இருக்கின்றார் என்பதைக் காண்போம்.

## அன்னையின் காட்சிகள்

தாயும் தந்தையுமான இறைவன் தொடர்ந்து இந்த உலகை அன்பு செய்கின்றார். துன்பம், சோதனை, இடர்பாடுகள் அனைத்திலுமிருந்து இயேசு இந்த உலகை விடுவித்து வருகின்றார். இவ்வுண்மைகளை நம் அன்னையின் காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக திருஅவை வேத விரோதிகளால், பல வகையான தப்பறைக் கொள்கைகளால் அலைக்கழிக்கப்படும் போது, மரியா பல இடங்களில் தோன்றுகிறார். தனது காட்சிகளின் போது உலகிற்கும், திருஅவைக்கும் முக்கிய செய்திகளை வழங்குகின்றார். இக்காட்சிகள் பிற சமயத்தவருக்கும், கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய சிறுவர்களுக்கும் அருளப்பட்டுள்ளன. மிக எளிமையாக, ஆனால் மாட்சியுடன் தோன்றி மரியா தனது விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

லூர்து அன்னை 1858 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 11 ஆம் நாள் பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து நகரின் வெளியே அமைந்திருந்த மசபியேல் என்ற குகையில் 14 வயது நிரம்பிய பெர்னதெத் என்ற ஏழைச் சிறுமிக்கு காட்சி அருளினார். அன்றிலிருந்து அவர்தம் காட்சிகள் ஜூலை 16 ஆம் நாள் கார்மேல் அன்னை விழா வரை நீடித்தது. மொத்தம் 18 காட்சிகள். 16 ஆவது காட்சியில் 'நாமே அமல உற்பவம்'' என்று மொழிந்தார். இக்காட்சிகளின் வழியாக லூர்து அன்னை நமக்குக் கற்றுத் தரும் பாடங்களை உற்றுக் கேட்போம்.

## காட்சிகள் சொல்லும் செய்திகள்

மரியா மிகவும் எளிமையானவர். இறைருளில் எப்போதும் மூழ்கி இருந்தார். அவர் காட்சி அளித்த பெர்னதெத் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். முறையான கல்வி கற்க வழியில்லாமல் விறகுகள் பொறுக்கச் செல்வதுண்டு. ஆனால் திருமறைப் போதனைகளை அறிவதிலும், செபமாலை செபிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உடையவராய் காணப்பட்டார். அன்னை மரியா எளிய உள்ளத்தினரை விரும்புகின்றார் என்பது இங்கு புலனாகின்றது. அன்னையின் தோற்றத்தை உற்று நோக்குவோம். மசபியேல் குகையின் அருகில் அழகிய அடர்த்தியான ரோஜா மலர்கள் பூத்து நின்ற





கொள்வோம். அன்னை மரியா வழியாக நாம் தினந்தோறும் சொல்ல தகுதி பெற்றுள்ளோம்.

## அருள் நிறைந்த மரியாள் முழுமையான மரியாள்

அன்னை மரியாவை அருள் நிறைந்த மரியே என்று கபிரியேல் தூதர் வழியாக தந்தையாம் கடவுள் அறிக்கையிட்டதை புனித அகஸ்டின் ஒரு காரணத்தை இணைத்து தருகிறார். அதை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் Full of grace , Full of faith அன்னை மரியாள் நம்பிக்கையால் நிறைந்திருந்ததால் அருளால் முழுமை பெற்றார் என்று கூறிகிறார். அன்னை மரியாவின் முழுமைக்கு அவரின் முழுமையான நம்பிக்கைதான் தொடக்கமாக அமைகிறது. அவரிடம் இருந்த நம்பிக்கை மட்டும் முழுமையாக அமையாது. மாறாக அவர் ஆண்டவரின் அருளை நிறைவாக பெற்றால்தான் முழுமை பெறுகிறார். குழப்பமாக இருப்பதுபோல் தெரிகிறதா இல்லவே இல்லை.

அன்னை மரியா நம்பிக்கையின் பெண் என்று முன்பு பார்த்துள்ளோம். அதுவும் வீரம் நிறைந்த நம்பிக்கை என்று பார்த்துள்ளோம். எனவே நம்பிக்கையினால் நிறைந்திருந்த மரியாள் கடவுளின் அருளால் இன்னும் தமது நம்பிக்கையை அதிகப்படுத்துகிறார். அதன் வழியாக கிறிஸ்துவை தமது உள்ளத்தில் உதிரத்தில் தாங்குகிறார். கிறிஸ்துவின் தாயாக முழுமை பெறுகிறார். கிறிஸ்துவின் தாயாக முழுமையடைந்த மரியாள் தமது கன்னிமையிலும் எப்பொழுதும் கன்னியாக நிலைத்து நின்று கன்னிமையிலும் முழுமை பெறுகிறார்.

## அன்னை மரியாவின் பாடலில் காணப்படும் முழுமை

அவர் தம் அடிமையின் தாழ்நிலையை கண்ணோக்குகிறார் (லூக் 1.48) என்று அன்னை மரியா தமது தாழ்ச்சியை நம்பிக்கை நிறைந்த தாழ்ச்சியை முன்நிறுத்தி அதன் வழியாக கடவுள் செய்த மாபெரும் அதிசயத்தை அற்புதத்தை தெளிவுபடுத்துகிறார். வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார் என்ற இறைவார்த்தையில் கடவுளின் அருளை பெற்று முழுமை அடைந்ததை அன்னை மரியா விவரிக்கிறார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார் என்ற இறைவார்த்தை வழியாக எதிர்மறை எண்ணங்கள் கொண்ட மனிதர்கள் முழுமை பெற முடியாது என்பதை சுட்டிக் காட்டுகிறார். நேர்மறை எண்ணம் கொண்ட மனிதர்கள் சாதிப்பார்கள் அல்லது உயர்வு பெறுவார்கள் அல்லது நிறைவு காண்பார்கள் இறுதியில் முழுமை அடைவார்கள் எனவே அன்னை மரியா, எப்பொழுதும் நேர்மறை எண்ணத்தோடு வாழ்கிறார். எனவே அன்னை மரியா முழுமை பெற்றவர் என்பது சாத்தியமே.

தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார், பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் என்ற இந்த இறைவார்த்தையிலும் அன்னை மரியா தமது முழுமையை வெளிப்படுத்துகிறார். கபிரியேல் வானத்தூதரிடம் தமது ஒப்புதலை அன்னை மரியா தெரிவித்தபோது தமது தாழ்ச்சியினால் தெரிவித்தார் எனவேதான் ஆண்டவர் அவரை மீட்பரின் தாயாக உயர்த்தியிருக்கிறார் என்று கூறி புனித அகஸ்டின் அன்னை மரியாவின் தாழ்ச்சியை பற்றி அதிகமாக எடுத்துக் கூறி பெருமிதம் கொள்கிறார். அன்னை மரியா – மிகவும் பசியாக இருந்தார் என்று கூறுகிறார். பசி என்பது நாம் உண்ணுகின்ற சாதாரண உணவு அல்ல மாறாக அன்னை மரியா ஆன்மீக பசியோடு இருந்தார் என்றும் இறுதிவரை கிறிஸ்துவின் மீட்பில் பங்கு பெற்றார் என்று விளக்குகிறார். நாமும் நமது வாழ்வில் முழுமை பெற வேண்டுமென்றால் அன்னை மரியாவைப் போல நம்பிக்கையோடு வாழ்வோம். இறைவன் தமது அருளை நிறைவாக நம்மீது பொழிந்து முழுமை பெற அருள்வாராக.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

16



சென்ற மாத இதழில் புனித அகஸ்டின் பார்வையில் அன்னை மரியாவின் தெய்வீக அழைத்தலைப்பற்றி பார்த்தோம். அன்னை மரியா இறைவனோடு விளையாடிய தெய்வீக விளையாட்டைப் பற்றி பார்த்தோம். இந்த மாத இதழில் அதன் தொடர்ச்சியாக லூக்கா நற்செய்தி 1:2638 வரையுள்ள இறைவார்த்தையின் உட்பொருளை புனித அகஸ்டின் பார்வையில் பார்ப்போம்.

**லூக்கா 1:26-38**

இந்த இறைவார்த்தை பகுதி புனித அகஸ்டினின் பார்வையில் அன்னை மரியாவைப் பற்றி ஆழமாக அறிவதில் சிறந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் கிறிஸ்துவின் மறைபொருளும் அன்னை மரியாவின் அருள் வாழ்வும் இணைந்திருப்பதை பற்றி கூறுகிறார். அருள் நிறைந்த மரியே வாழ்க என்ற பகுதியில் புனித அகஸ்டின் இறைவனின் அருளை அதிகப்படுத்திக் கூறுகிறார். புனித மரியாவின் வாழ்வில் ஆதாரமாக இந்த இறையருள் இருப்பதை புனித அகஸ்டின் தெளிவுப்படுத்துகிறார். இந்த இறையருளைப் பற்றி யாரால் விளக்கி கூற முடியும்? என்ற வினாவைத் தொடுத்து அதற்கு விடையும் அளிக்கிறார். அன்னை மரியா தமக்கு கிடைத்த அருளுக்கு ஏற்றபடி நன்றியுள்ளவராக இறுதிவரை கடவுளின் திட்டத்தில் முழுமையாக பங்கெடுக்கிறார்.

**ஜெபமாலை பகுதி**

தினந்தோறும் மக்கள் எல்லாரும் உச்சரித்து சொல்லுகிற செபமாலையில் வரும் அருள் நிறைந்த மரியே வாழ்க என்ற வார்த்தை சாதாரண வார்த்தையில்லை. பிரிந்த சபை சகோதர சகோதரிகள் குற்றம் சுமத்துகிறார்கள், சாதாரண வார்த்தை என்று. அவர்களுக்கு நாம் எல்லாரும் மிக கவனமாக பதில் தர வேண்டும் இது சாதாரண ஜெபமாலை வரிகள் மட்டுமல்ல. மாறாக இதுவும் இறைவார்த்தை பகுதியே என்று அதைவிட மேலாக இது சாதாரண இறைவார்த்தை பகுதியல்ல மாறாக தந்தையாம் கடவுள் விருப்பப்பட்டு கொடுத்த வார்த்தை இந்த இறைவார்த்தை. தந்தையாம் கடவுள் திட்டமிட்டு கபிரியேல் வானதூதர் வழியாக அன்னை மரியாவிடம் சொல்லப்பட்ட வார்த்தையே இந்த இறைவார்த்தை. இதுவே நாம் தினந்தோறும் சொல்கிற மங்கள வார்த்தை.

**யோவான் நற்செய்தியோடு இணைத்து**

யோவான் நற்செய்தியோடு இணைத்துப் பார்த்தால் தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. அதாவது அவ்வாக்கு கடவுள் தன்மை கொண்டிருந்தது(யோ1.1) என்று பொருள் வருகிறது. தொடக்கத்தில் தந்தையாம் கடவுளிடம் இருந்த வார்த்தை இறைவார்த்தை. கபிரியேல் தூதர் வழியாக அன்னை மரியாவிடம் சென்று உயிர் பெறுகிறது மனித உயிர் பெறுகிறது அதுவே கிறிஸ்துவாக உரு பெறுகிறது என்ற வார்த்தை புனித அகஸ்டின் இணைத்து பார்க்கிறார். அருள் நிறைந்த மரியே வாழ்க என்ற இறையருள் நிரம்பிய இறைத்திட்டம் ததும்பிய இறைவார்த்தையை தினந்தோறும் சொல்வதில் பெருமிதம்





செடி மீது நின்ற வண்ணம் வெள்ளை ஆடை அணிந்து காட்சி தந்தார். கைகள் கூப்பியவாறு செபமாலை ஏந்தியவராய் நின்றார். அவரது பெயரைக் கேட்டபோது வானத்தை சற்று அண்ணார்ந்து நோக்கிய பின் 'நாமே அமல உற்பவம்'' என்று உரைத்தார் என பெர்னதெத்தின் வரலாறு கூறுகிறது. இன்றைய இளையோர் அன்னையின் காட்சியிலிருந்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தூய்மையான உள்ளம், மென்மையான இதயம், செபநிறை வாழ்வு, விண்ணகம் பற்றிய எண்ணம் அனைத்தும் இறைவன் இவர்களிடமிருந்து அன்னை வழியாக விரும்புகின்றார். உலக மதிப்பீடுகளில் மூழ்கி விடாது இவர்கள் அன்னையின் பாதையில் நடந்தால் உண்மையான மகிழ்வோடு வாழ்வார்கள்.

மரியாவின் ஒன்பதாவது காட்சியில் (பெப்ருவரி 25, 1858) பெர்னதெத்தை நோக்கி, அருகில் ஒரு இடத்தைக் காட்டி அதைத் தோண்டச் செய்து அதில் வரும் நீரை குடிக்கக் கேட்டுக்கொண்டார். இதுதான் பின்னாளில் பெரிய நலம் தரும் ஊற்றாக மாறி அநேகம் பேர் சுகம் பெற்றுச் செல்ல புதுமைகள் நடக்கும் புண்ணியத் தலமாக மாறியுள்ளது. மருத்துவர்களால் கைவிடப்பட்ட எத்தனையோ மக்கள் இங்கு வந்து இந்த புதுமையான நீரைப் பருகியும், அதை தங்கள் மீது தெளித்தும் செல்லும் காட்சி தொடர்கிறது. எனவே தான் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் பெப்ருவரி 11 ஆம் நாள் அகில உலக நோயாளிகளின் தினமாகக் கொண்டாடப் பணித்தார். வேளாங்கண்ணியிலும் கூட மரியா, முடமான ஒரு சிறுவனிடம் மோர் கேட்டு அவனை நடக்கச் செய்தார் என்று அறிய வருகிறோம்.

இயேசு உலகில் வாழ்ந்த போது நோயுற்றோரைக் குணமாக்குவதை மிக முக்கியமானப் பணியாகக் கொண்டிருந்தார். 'மருத்துவர் நோயற்றவருக்கு அல்ல, நோயுற்றவருக்கே தேவை'' என்று உரைத்தார். நோயாளிகளைத் தொட்டுக் குணப்படுத்தினார். அந்த குணமளிக்கும் ஆற்றல் இன்னும் அன்னையின் திருத்தலங்களில் உணரப்படுகிறது. நம்பிக்கையோடு செல்வோர் நலம் பெறுகின்றனர். உடலில் மட்டுமல்லாது, உள்ளத்திலும் ஆயிரக்கணக்கானோர் நோயுற்று இருக்கின்றனர். உள்ள நோய், உடல் நோயாக மாறுகிறது. இத்தகையோருக்காக நாம் இறைவேண்டல் செய்ய வேண்டும். இத்தகைய சூழல் உருவாகாமல் நமது வார்த்தைகளும், செபங்களும் மற்றவர்களுக்குக் காயங்களை அல்ல, மாறாக ஆறுதலை, தேறுலை, குணப்படுத்துதலைத் தர வேண்டும். இந்த உலகின் காயங்கள் திருஅவையின் காயங்கள். இறைமகன் இயேசு நமது காயங்களை ஆற்ற வந்தார். அவர் குணப்படுத்துபவர். லூர்து அன்னையின் விழாவில் நாம் ஒவ்வொருவரும் மற்றவரை குணப்படுத்துபவர்களாக மாற அருள் வேண்டுவோம். நம்பிக்கை ஆண்டிலே உலக சகோதரத்துவம் உருவாக செபிக்கின்றோம். உலகமெங்கும் உள்ள உடல், உள்ள நோயுற்றோர் அன்னையின் பரிந்துரையால் ஆரோக்கியம் பெற்று மகிழ்வுடன் வாழ உருக்கமாக செபிப்போம்.

**செபமும் தவமும்**

அன்னையின் காட்சிகளில் அவர் நமக்கு அழுத்தம் தருவது செபமும் தவமும் ஆகும். பாவிகள் மனமாற்றம் பெற நாம் செபிக்க அறிவுறுத்துகிறார். லூர்து நகரில் அருளிய தனது 9 ஆவது காட்சியில் (பெப்ருவரி 25, 1858) 'பரிகாரம், பரிகாரம், பரிகாரம்'' என்று மூன்று முறை கூறினார். பாவிகள் மனம் திரும்ப செபிக்க வேண்டும். அதன் அடையாளமாக அருகில் உள்ள ஒரு இடத்தைக் காட்டி, அதை பெர்னதெத்தைத் தாழ்பணிந்து முத்தி செய்யக் கூறினார். அதில் வளர்ந்து நின்ற புற்களை உண்ணக் கேட்டுக்கொண்டார்.

அன்னை, பாத்திமாவில் காட்சி கொடுக்கும் போதும் பாவிகள் மனம் திரும்பவும், ரஷ்ய நாடு மனமாற்றம் அடையவும் செபிக்கக் கேட்டுக் கொண்டார். ஆம். இன்று நாம் அதிகமாகவே செபிக்க வேண்டும். செப ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் இதை அதிகம் வலியுறுத்தினார். வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல சில செபங்களைச் சொல்லி விடுவதில் திருப்தி காணாமல், ஆழ்ந்த அமைதியில், இறைவார்த்தையின் ஒளியில், நற்கருணைப் பிரசன்னத்தில், இறைவனின் அன்பை உணர்வோம். நாமும் நமது அன்பை அவருக்குக் காட்டுவோம். தொடக்கக் கால நம்பிக்கையாளர்களைப் போன்று

வாழ்வும் வழிபாடும் இணைந்து செல்லட்டும். ஏழைகளுக்கு உதவி செய்வது நமது செபங்களின் பிரதிபலிப்பாக அமையட்டும். அப்போதுதான் நாம் இம்மையில் அமைதியும் மகிழ்வும், மறுமையில் முடிவில்லா பேரின்பத்தையும் அடைவோம்.

மரியாவின் முக்கியமான வேண்டுதல் நாம் அனைவரும் பாவிகளுக்காக மன்றாட வேண்டும் என்பதாகும். நாம் முதலில் பாவமற்ற வாழ்வு வாழ வேண்டும். இன்று உலகில் பாவ உணர்வு மெல்ல மறைந்து வருகிறது. தன்னலமும், மற்றவரைப் பற்றி அக்கறை கொள்ளாத நிலையும் பாவமாகும். எனவே கிறிஸ்தவர்களாகிய நாமும், நமது அயலாரின் தேவைகளில் உதவி செய்யத் தவறும் போதெல்லாம் பாவம் செய்கிறோம். இறையன்பும், பிறரன்பும் இணைந்தே செல்லட்டும். பாவம் தலைதூக்கும் போது இயேசு மீண்டும் பாடுகளை அனுபவிக்கின்றார். எனவே இயேசுவின் சிலுவை வேதனையையும், மரியாவின் வியாகுலங்களையும் புதுப்பிக்காமல் இருப்போம். மற்றவரின் துயர் துடைப்போம். இத்தகைய செப, தவ வாழ்வினால் அன்னையின் வேண்டுகோளை நிறைவேற்றுவோம்.

**நாமே அமல உற்பவம்**

தலத் திருஅவையின் தலைவர்கள் பெர்னதெத்திடம் அன்னையின் பெயரை வினவக் கேட்டனர். அன்னையும் அமைதியுடன் புன்முறுவலுடன் காலம் தாழ்த்தினார். மூன்று வாரங்கள் சென்ற பின் மங்கள வார்த்தை விழா அன்று, கரங்களைக் குவித்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, 'நாமே அமல உற்பவம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார். மரியா, தொடக்கநிலைப் பாவம் இன்றி கருவானார். பாவ நிழல் அவரை அணுகவில்லை. ஆண்டவரின் அருள் வரங்களால் நிறைக்கப்பட்டார். 'அருள் நிறைந்தவரே வாழ்க'' என்று ஆண்டவரின் தூதரால் விளிக்கப்பட்டார். ஆண்டவரின் தாய் என்று அன்பொழுக எலிசபெத்தால் அழைக்கப்பட்டார். மரியா சென்றவிடமெல்லாம் ஆவியார் பொங்கி வழிந்தார். பெண்களுள் பேறுபெற்றவரானார். நாமும் திருமுழுக்கின் போது தொடக்கநிலைப் பாவத்திலிருந்து தூயவராய்ப் பிறக்கின்றோம். அருள்சாதனங்கள், நற்கருணை திருவிருந்தினால் அருளுக்கு மேல் அருளைப் பெறுகின்றோம். மீட்பின் பயன்களை அனுபவிக்கின்றோம். இயேசு ஒரு முறை கூறுவார், 'இறைவார்த்தையைக் கேட்டு அதனைக் கடைபிடிப்போர் என் தாயினும் மேலானோர்'' என்று. ஆம். இறைவார்த்தை, இறைவனின் விருப்பத்தை நினைவூட்டுகின்றன. எனவே இறைவார்த்தையின்படி வாழ்வோம். உடலிலும் உள்ளத்திலும் தூய்மை உடையவராய் இருப்போம். நமது எண்ணங்கள், சொற்கள், செயல்கள் அனைத்தும் இறைவார்த்தை கலந்த நறுமணம் நிறைந்ததாக அமையட்டும்.

**நிறைவுரை**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அன்றும் இன்றும் இறைமகன் இயேசு ஒரு தெய்வீக மருத்துவராக நாம் உடலிலும், உள்ளத்திலும் பூரண நலமுடன் வாழ விரும்புகின்றார். நலமான உறவுகளே ஆரோக்கியமான உடலுக்கு ஆதாரங்கள். லூர்து அன்னை காட்சி அருளிய இடத்தில் தோன்றிய நீரூற்று சுகம் தரும் ஜீவநீராகக் கருதப்படுகிறது. அந்த நீரைப் பருகியவர், தன் உடலை நனைத்தவர் நல்ல சுகம் பெற்றுச் செல்வதை அறிய வருகின்றோம். 'நான் தரும் நீரோ அவருள் பொங்கியெழும் ஊற்றாகும்'' என்று இயேசு கூறினார். 'விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்''. நாம் ஒவ்வொருவரும் பங்கேற்கும் திருப்பலியில் உயிருள்ள இறைவன் நம்மில் உறைய வருகின்றார். அவரை சிறந்த தயாரிப்புடன் வரவேற்பதும், நம்மில் அவர் நம்மில் செயல்பட வைப்பதும் நமது கடமை. ஒவ்வொரு நற்கருணைக் கொண்டாட்டத்திலும் வாழ்வு தரும் உணவாம் இயேசு நம்மில் சங்கமம் ஆகின்றார் என்ற நம்பிக்கையில் வளர்வது நமது உடலிலும் உள்ளத்திலும் ஆன்மாவிலும் புத்துணர்ச்சியை, புதுப்பித்தலை, உருவாக்கும். இந்த வரத்தை லூர்து அன்னை நம் அனைவருக்கும் அருள்வாராக!





அறிவிக்க விரும்பி அதிசீக்கிரமாய் அன்னை மரியா இருந்த இடத்திற்குப் போனார். அப்போது அன்னை மரியாவைக் கண்டு மிகுந்த துக்கத்தோடு செய்தியை அறிவிக்கின்றார். உடனே அங்கிருந்த பெண்கள் கொடியவர்கள் சேசுவைக் கொலைப்படுத்துவதற்கு முன் நாம் செல்ல வேண்டும் என்று கூற அன்னையும் யோவானும் அங்கிருந்த பெண்களும் சிலுவை சுமந்து செல்லும் சேசுவைக் காண விரைந்து செல்கிறார்கள்.

அப்போது அன்னை கண்ட காட்சி நெஞ்சை உறைய வைப்பதாக இருந்தது. தலையில் முள்முடி: அதனால் ஏற்பட்ட காயங்களில் இருந்து வடிந்த இரத்தத்தினால் மறைக்கப் பட்ட கண்கள்: கொடியவர்களின் எச்சிலாலும் சேசுவின் இரத்தத்தினாலும் அழகிழந்த பரிசுத்த திருமுகம்: தோள்மீது பாரச்சிலுவை: தள்ளாடி தள்ளாடி நடந்து வரும் சேசுவை கண்டு அன்னை பதறுகிறாள். உள்ளம் பதைபதைத்து துடிக்கிறது. பேச வார்த்தைகள் வரவில்லை. அன்னையின் கண்களும் சேசுவின் கண்களும் உற்றுநோக்குகின்றன. அன்பின் குரல் பரிமாறப்படுகிறது. மகனே... என்று அன்னையும் அம்மா... என்று சேசுவும் தங்கள் கண்களால் பேசிக்கொள்கின்றனர். எவ்வளவு கொடிய வியாகுலம் அன்னைக்கு, சிமியோன் தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. ஆம்! அன்னையின் உள்ளத்தை வியாகுல வாள் ஆழமாய் ஊடுருவுகிறது.

**பொதுநிலையினர் பார்வையில் அன்னையின் நான்காம் வியாகுலம்:**

அன்னை மரியாவின் இந்த கொடிய வியாகுலம் யாருக்காக? பாவிகளாகிய நம்மை மீட்பதற்காகவே! ஆனால் நாம் என்ன செய்கிறோம். தவக்காலத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் சிலுவைப்பாதை நிகழ்வில் பெயரளவுக்கு கலந்து கொண்டு நம்முடைய வாழ்வில் எத்தகைய மாற்றமுமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் மரியின் ஊழியர் சபை உள்ள பங்குகளில் தவக்காலத்தின் கடைசி வெள்ளிக்கிழமை மரியாவின் துன்பப்பாதை என்னும் தலைப்பில் அன்னை மரியாவின் வியாகுலங்களை தியானிக்கிறோம். ஆனால் நமக்காகப் பாடுபட்டு உயிர்நீத்த சேசுவின் துன்பங்களோடு அன்னையும் இறுதிவரை நிலைத்து நின்று தன்னுடைய தாங்கமுடியாத வியாகுலங்களை நமக்காக தாங்கிக் கொண்டார்கள் என்பதை நினைக்கும் போதும் சிந்திக்கும் போதும் நாம் அன்னை மரியாவை அன்பு செய்யாமல் இருக்க முடியாது. எனவே அன்னை மரியாவை நேசிப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அன்னையின் விருப்பங்களை அறிந்து நிறைவேற்ற வேண்டும். அன்னையின் விருப்பங்களை எவ்வாறு அறிந்து கொள்வது? அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் (யோவான் 2:5) என்ற அன்னையின் வாக்கின் மூலம் சேசுவின் விருப்பமே அன்னையின் விருப்பம் என்பதை உணர்ந்தவர்களாய் நம்முடைய ஆன்மாவின் ஈடேற்றங்களுக்கான பணிகளிலும் கடவுளை மாட்சி படுத்துவதிலும் முழுமையாக நம்மை ஒப்புக் கொடுப்போம். உலகக் காரியங்களை படிப்படியாக புறந்தள்ளுவோம். அப்போது வியாகுல அன்னையின் அன்புக்கரங்களால் அரவணைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவோம்.

வியாகுல மரியே வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 4

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவின் மூன்றாம் வியாகுலத்தை, திருக்குடும்பம் பாஸ்கா விழா கொண்டாட எருசலேமுக்கு பயணம் மேற்கொள்கிறார்கள். விழா முடிந்து திரும்பிய போது சிறுவன் சேசுவை காணவில்லை. இந்த துயரமான நிகழ்வில் அன்னை மரியாள் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை விசுவாச ஒளியில் சிந்தித்த நாம், சேசு சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு மண்டை ஓட்டு இடம் என்னுமிடத்திற்குச் சென்றார் (யோவான்:19:17) என்னும் இறைவார்த்தையின் படி சேசு சிலுவை சுமந்து சென்ற போது அன்னை மரியா அவரை எதிர் கொண்டு சந்தித்த போது அடைந்த அளவில்லா வியாகுலங்களை குறித்து இப்போது தியானிப்போம்.

**புனிதர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட அன்னையின் நான்காம் வியாகுலம்:**

சேசுநாதர் சிலுவை சுமந்து போகிற செய்தியை தேவமாதா அறிந்து, தம் திருக்குமாரன் சாகிற சமயத்தில் அவர் அருகில் இருக்க விரும்பிப் புறப்பட்டார்கள். போகிறபோது தம் திருக்குமாரன் எந்த வழியாய்ப் போகிறாறென்று மற்றவர்களைக் கேட்கத் தேவையில்லை. ஏனென்றால் சேசுநாதர் சிலுவை சுமந்து போகிற போது அவருடைய உடலின் காயங்களிலிருந்து வழியில் சிந்திய இரத்த துளிகளைக் கொண்டு சேசு போன வழியை அறிந்துகொண்டோமென்று தேவமாதா புனித பிரிஜித்தம்மாளுக்கு அறிவித்தார்கள்.

அன்னை மரியாள் தமது திருக்குமாரனுக்கு எதிரே போன சமயத்தில் சேசுநாதரைக் கட்டியிருக்கிற கயிறுகளை அவிழ்கிறதற்கும் அவருடைய காயங்களைக் கட்டுகிறதற்கும் திருமுகத்தில் வடிகிற இரத்தத்தைத் துடைக்கிறதற்கும் மிகுந்த ஆவலாயிருந்தாலும் போர்வீரர்கள் தடைசெய்ததால் அன்னையால் சேசுவுக்கு ஒரு உதவியும் செய்யக் கூடாமற்போயிற்று. இந்நிகழ்வை புனித அன்செல்ம் தன்னுடைய புத்தகத்தில் எழுதி வைத்துள்ளார்.

ஆண்டவர் தமது தாயாரைப் பார்ப்பதற்காக தமது கண்மேல் உறைந்திருந்த இரத்தத்தை தமது திருக்கையால் தள்ளினாரென்று புனித பிரிஜத்தம்மாள் திருச்சபைக்கு வெளிப்படுத்தினார்.

**சிலுவை சுமந்து வரும் சேசுவை அன்னை மரியா சந்தித்தல்:**

ஆண்டவர் மீது அதிக அன்பு கொண்ட யோவான் சேசுவுக்கு விதிக்கப்பட்ட கொலைத் தீர்ப்பை நிறைவேற்ற அவரைக் கூட்டிக்கொண்டு போகிறதைக் கண்டு, இந்த துக்கச் செய்தியை அவருடைய அன்னைக்கு





# அன்னையின் 74 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**புனித கிளமெண்ட் மரியின் ஊழியர் பேராலயம், சீயன்னா, இத்தாலி பகுதி 1**

இத்தாலியின் பழமையான நகரங்களில் ஒன்று சீயன்னா ஆகும். உலகின் பழமையான வங்கியான மோன்தே தே பாஸ்கி வங்கி இந்நகரில் கி.பி. 1472ல் தொடங்கப்பட்டு இன்று வரை செயல்பட்டு வருகிறது. உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான சீயன்னா பல்கலைக்கழகம் கி.பி. 1240 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று வரை செயல்படுகிறது. உலகப் புகழ்பெற்ற பல ஓவியர்களை இவ்வுலகிற்கு தந்த பெருமையும் இந்நகருக்கு உண்டு.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னம் என்கிற அடையாளத்தையும் இந்நகரம் பெற்றிருக்கிறது. ஆண்டுதோறும் ஜீலை 2ம் தேதியும், ஆகஸ்டு 16ஆம் தேதியும் நடைபெறுகிற பாலியோ (Palio di Siena) என்கிற குதிரை பந்தயம் உலகப் புகழ்பெற்றதாகும். காம்போ சதுக்கத்தில் நடைபெறும் இக்குதிரை பந்தயத்தில் நகரின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட 17 படைபிரிவின் சார்பாக ஒரு குதிரை வீரர் என, 17 வீரர்கள் கையில் அன்னை மரியாவின் உருவம் பொதிந்த கொடியை கையில் ஏந்தியவராய் சதுக்கத்தை சுற்றி 3 முறை வலம் வருவார்கள். 90 வினாடிகள் மட்டுமே நடக்கும் இப்போட்டியைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருப்பர்.

ஜீலை 2ம் தேதி அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்த திருவிழாவை கொண்டாடும் விதமாகவும், புரோவென்சோ நகரில் அமைந்துள்ள அன்னையின் ஆலயத்தின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் இப்போட்டி நடைபெறுகிறது. ஆகஸ்டு 16ஆம் தேதி போட்டியானது அன்னையின் விண்ணேற்பு திருவிழாவை கொண்டாடும் விதமாக நடைபெறுகிறது.



பழமையும் பாரம்பரியமும் மிக்க இந்நகரத்தின் மக்கள் அன்னை மரியாளின் அரவணைப்பிலும், பரிந்துரையிலும் எந்நாளும் தாங்கள் வாழ்கிறோம் என்பதை ஆத்மார்த்தமாக உணர்ந்தவர்கள். எனவே தான், அன்னையின் விழாக்களை தங்கள் வீட்டு விழாவாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

மரியின் ஊழியர் சபையானது கி.பி. 1233ஆம் ஆண்டு ∴ ப்ளாரென்ஸ் நகரில் தொடங்கப்பட்டது. சபை தோற்றுவிக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே அதாவது, கி.பி. 1250ஆம் ஆண்டு அளவிலேயே சீயன்னா நகருக்கு வந்து தங்கள் பிரசன்னத்தை தொடங்கினர். முதலில் நகரின் மதிற்சுவர்களுக்கு வெளியே தங்கள் வாழ்வை தொடங்கினர். ஆனால், சில ஆண்டுகளுக்குள்ளே தொலோமேய் குடும்பத்தினர் கொடையாக வழங்கிய இடத்தில் தங்கள் இல்லத்தையும், ஆலயத்தையும் கட்ட தொடங்கினர். ஆலய கட்டிட பணிகளுக்கு தேவையான பொருட்களை நகரசபை வழங்கியது. அந்த இடத்தில் அதற்கு முன் இருந்த புனித







2. **யோசேப்பு** : யூத சட்டப்படி கணவன், மனைவி எனத் திருமண ஒப்பந்தமான பிறகு தனது வீட்டிற்குக் கூட்டிச் செல்கின்ற வரை அந்தத் திருமணம் முழுமையானது அல்ல. ஆனாலும் திருமண ஒப்பந்தத்திற்குபின் கணவனும் மனைவியும் அவர்களுக்குப் பிறந்த குழந்தையும் சட்டப்பூர்வமானனைவை ஆகும்.

யோசேப்பு கூடி வாழ்வதற்குமுன் தனது மனைவி மரியா கருவுற்றிருப்பது தெரிய வந்ததும் அவரை மறைமுகமாகக் கைவிட்டுவிடத் தீர்மானிக்கிறார். நீதிமான் (மத்1,19) என்று அழைக்கப்படுகின்ற யோசேப்பு, மரியாவை விபச்சாரி என்று சமுதாயத்திற்கு வெளிப்படுத்தியிருக்கலாம். உண்மையான யூதன் என்ற முறையில் மரியா மீது முதல் சாட்சி என்ற முறையில் முதல் கல்லை எறிந்திருக்கலாம். (இணைச்சட்டம் 22:20,21) யூத முறைப்படி விபச்சாரத்தின் முதல் சாட்சி முதல் கல்லை விபச்சாரத்தில் பிடிப்பட்டவர்மீது எறிய வேண்டும். எனவேதான் இயேசு உங்களுள் பாவம் செய்யாதவர் முதலில் கல்லெறியட்டும் என்கிறார் (யோ 3,7). ஆனால் நீதிமான் யோசேப்பு அன்னை மரியாவைப் பற்றி உயர்வான கருத்தை மக்களுக்கு கொடுக்க நினைக்கிறார். இழிவான தண்டனையிலிருந்து மரியாவைக் காப்பாற்றுகிறார். இவ்வாறு யோசேப்பு மரியாவுக்கு முதல் வணக்கத்தை செலுத்துகிறார்.

3. **எலிசபெத்** : இயேசுவின் காலத்தில் பதவியும் பணமும் படித்த சட்டமும் ஒருவரை சமுதாயத்தில் உயர்வான அந்தஸ்தில் வைத்து அழகு பார்த்தது. எனவேதான் பரிசேயர்களும், சதுசேயர்களும் சட்ட வல்லுநர்களும் குருக்களும் உயர்வாக மதிக்கப்பட்டனர். ஏழைகள் நாயினும் கேவலமாக நடத்தப்பட்டனர்.(லூக் 16,19-31)

ஆனால் லூக் 1,39-45 ல், எலிசபெத் அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்துகிறார். குருத்துவ வழிமரபில் வந்த எலிசபெத் சமுதாயத்தில் உயர்வாக கருதப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய உயர்குலப் பெண் சாதாரண ஏழைப் பெண்ணான மரியாவை உயர்த்திப் பேசுகிறார். சமுதாயத்தில் மரியா எந்த விதத்திலும் உயர்ந்தவர் அல்ல, அத்தகைய மரியாவை உயர்குலப் பெண் எலிசபெத் பெண்களுள் பேறுபெற்றவர் (லூ 1,42) என்று முதன்மையான வணக்கம் செலுத்துகிறார்.

கத்தோலிக்கர்களான நாம் அன்னை மரியாவுக்கு செலுத்துவது உயர் வணக்கம். ஆராதனை அல்ல.

கிரேக்க மொழியில் லாட்ரியா என்பது சேவை என்ற பொருளை உணர்த்துகிறது. கடவுளுக்கு மட்டுமே உரித்தான ஆராதனையைத் தான் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் லாட்ரியா என்ற பெயரில் செய்து வருகின்றனர். மூவொரு இறைவன் ஒருவருக்கே இந்தப் புகழ்ச்சியும் ஆராதனையும் உரியது.

தூலியா என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் அடிமை நிலையைக் குறிக்கும் சொல்லாகும். அதாவது மண்ணில் புனிதமான வாழ்வு வாழ்ந்தமைக்கு மனிதர்கள் சிலரைப் புனித நிலைக்கு உயர்த்தித் திருச்சபை அவர்களுக்கு மண்ணில் மரியாதை செலுத்துகிறது. அதாவது புனிதர்கள் கடவுள்முன் அடிமைகள் போன்று தாழ்ந்து பணிந்து உண்மையான சீடர்களாக வாழ்ந்தவர்கள். எனவேதான் இவர்களை அடிமைகள் என்று பொருள்படகூடிய தூலியா என்ற வார்த்தையின் மூலம் திருச்சபை மரியாதை செலுத்துகிறது.

அடிமைகளுக்கெல்லாம் முதன்மையானவர் அன்னை மரியா (லூக் 1,38) ஆண்டவரின் மீட்புத் திட்டத்தில் முழுமையாக பங்குபெற்ற முதல் பெண்ணானதால் புனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையிலிருந்து சற்று உயர்ந்த வணக்கத்தைத் திருச்சபை அன்னை மரியாவுக்கு தெரிவித்து மகிழ்கிறது. திருச்சபை இதை கைப்பர் தூலியா என்று கிரேக்க மொழியில் அழைக்கிறது.

**விவிலியத்தில் அன்னை மரியாவுக்கு வணக்கம்**

அன்னை மரியாவுக்கு நாம்தான் ஏதோ தெரியாமல் வணக்கம் செலுத்துகின்றோம் என்று நினைக்க வேண்டாம். விவிலியத்தில் இயேசுவோடு சேர்ந்து யோசேப்பும், எலிசபெத்தும் சிறப்பான வணக்கம் செலுத்துகின்றனர்.

1. **இயேசு** : இயேசு விவிலியத்தில் பல இடங்களில் மறைமுகமாக அன்னை மரியாவுக்கு சிறப்பான வணக்கம் செலுத்துகிறார். தனது விரலை இயேசுவின் விலாவுக்குள் இட்டாலொழிய நான் அவரை நம்ப மாட்டேன் என்று கூறிய தோமாவுக்கு இயேசு கூறிய பதில் அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்துவதாக அமைகிறது. அதாவது நீ என்னை கண்களால் கண்டதால் நம்பினாய் காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர் (யோ 20,29) என்ற வார்த்தை அன்னை மரியாவுக்கு பெருமை சேர்க்கிறது. கடவுளைக் காணாமல் நம்பியவர்களில் மனுக்குலத்திலேயே முதன்மையான பெண் அன்னை மரியாதான். இதைத்தான் புனித அகஸ்டின் அழகாக கூறுகின்றார். கருவறையில் உள்வாங்கும் முன்னரே இயேசுவை தனது இதயத்தில் பெற்றவர் அன்னை மரியா.







கிளமெண்ட் பங்கு ஆலயத்தை நினைவில் கொண்டு மரியின் ஊழியர் சபையின் ஆலயத்தை புனித கிளமெண்ட் மரியின் ஊழியர் பேராலயம் என்று பெயரிட்டனர்.

இந்த புனித கிளமெண்ட் திருஅவையின் முதல் திருத்தந்தையான புனித பேதுருவால் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டவர். புனித பேதுருவுக்கு பிறகு திருஅவையின் திருத்தந்தையாகவும் இருந்தவர். இந்த ஆலயத்தில் புனித கிளமெண்டின் வாழ்வை சித்தரிக்கும் அற்புதமான ஓவியங்கள் இருந்தன. இவ்வோவியங்கள் பேராலய மையபீடத்தில் இருந்தன. ஆலயத்தின் பீடத்தில் புனித கிளமெண்ட் வாழ்வை நினைவுகூறும் நான்கு அற்புத ஓவியங்கள் இருந்தன. அவை அனைத்தும் தனித்தனியாக பிரிக்கப்பட்டு உலகிலுள்ள முக்கியமான ஓவிய அருங்காட்சியகங்களுக்கு விற்கப்பட்டுவிட்டன. இது, எப்போது, யாரால் செய்யப்பட்டது என்பதற்கான சான்றுகள் இல்லை. கி.பி. 1998ஆம் ஆண்டு நியூயார்க் மெட்ரோபாலிடன் ஓவிய அருங்காட்சியம் ஒரு காட்சிக்காக இந்த நான்கு ஓவியங்களையும் பெற்று, இணைத்து காட்சிக்கு வைத்திருந்தனர். பின்





அவை அதன் ஓவியக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. முதல் ஓவியத்தில் கிளமெண்டின் பெற்றோரும், சகோதரர்களும் கடலில் காணாமற் போவதும், அவர்களை காணாத கிளமெண்ட் நிலைவாழ்வு குறித்து கேள்விஎழுப்பியவராய் இருப்பதும் வரையப்பட்டுள்ளது. இரண்டாம் ஓவியத்தில் அவருடைய பெற்றோரும், சகோதரர்களும் புனித பேதுருவின் முயற்சியால் கிடைக்கப்பெற்று மீண்டும் இணைவதும், மூன்றாவது ஓவியத்தில் கிளமெண்ட் புனித பேதுருவுக்கு பதிலாக உரோமை ஆயராக திருநிலைப்படுத்தபடுவதும்,







# மாதா மன்றாட்டு மாலை

16

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



**மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே**

- கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கோழிமுட்டையிலுள்ள வெள்ளை மற்றும் மஞ்சள் கருவை சாப்பிடுவதற்கு பதிலாக முட்டை ஓட்டை சாப்பிடுகிறார்கள்.
- அவர்கள் சோற்றை சாப்பிடுவதற்கு பதிலாக சோற்றுப் பானையை நக்குகிறார்கள்.

கத்தோலிக்கர்கள் அன்னை மரியாவுக்குக் கொடுக்கின்ற வணக்கத்திற்கு கிடைத்த விமர்சனங்கள்தான் மேற்கூறப்பட்டவை

ஆராதனை கடவுள் ஒருவருக்கு உரியது. ஆனால் கத்தோலிக்கர்கள் அன்னை மரியாவை (மனிதரை) ஆராதிக்கின்றனர் என்றும், பத்து கட்டளைகளுள் முதன்மையான கட்டளையை இவர்கள் மறந்து விடுகின்றனர் என்றும் பிரிவினை சபையினர் கத்தோலிக்கர்கள் மீது பழி கூறுகின்றனர்.

ஆனால் உண்மையில் கத்தோலிக்கத் திருச்சபையில் நடப்பது என்ன? கடவுளுக்கும் மரியாளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

கிறிஸ்தவ தொடக்கக் காலத்தில் ஒரு குழுவினர் மரியாவை கடவுளாக எண்ணி கொண்டாடினர். இவர்களை எப்பிப்பானியுஸ் என்ற திருச்சபை தந்தையர் கடுமையாக விமர்சிக்கிறார். எந்தப் பெண்ணும் குருத்துவப் பணியை ஏற்க முடியாது, அன்னை மரியாளும் இதற்கு விதிவிலக்கல்ல என்றும் மேலும் அன்னை மரியாளும் இதற்கு விதிவிலக்கல்ல என்றும் மேலும் அன்னை மரியா புனிதமானவள்தான் சந்தேகமில்லை ஆனால் கடவுள் இல்லை. அன்னை மரியா மதிப்பிற்குரிய கன்னிதான் ஆனால் நாம் ஆராதிக்கவில்லை. மாறாக தன்னுடைய கருவறையிலிருந்து வந்தவரை வணங்க அனுப்பப்பட்டவர்தான் அன்னை மரியா என்கிறார். எனவே ஆராதிக்கப்பட வேண்டியர் கடவுள். வணக்கம் செலுத்தப்பட வேண்டியர் அன்னை மரியா.

இந்தப் பின்னணியை விலியுறுத்த எப்பிபானியுஸ் யோவான் 2,43 மேற்கோள் காட்டுகிறார். அதாவது மரியாவை சாதாரணப் பெண்ணாக எண்பிக்க அம்மா என்று இயேசு அழைக்கிறார்.



# ஏழு புனித தந்தையர்கள்



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

13 ஆம் நூற்றாண்டு, பிளோரன்ஸ் நகரை சார்ந்த ஏழு வணிகர்கள், அன்னை மரியின் விசுவாசமான பக்தர்களாக, தவம், இறைச்சிந்தனை மற்றும் சமூகப்பணி மூலம் அன்னைக்கு சேவை செய்வ முடிவு செய்தனர்.
இந்த எழுவரின் பெயர்கள் பின்வருமாறு: Bonfiglio, Bonagiunta, Manetto, Amadio, Sostegno, Uguccione, Alessio .
1233 ஆம் ஆண்டில், ஏழு பேரும் தங்கள் வணிகத்தை விட்டு விட்டு, அனைத்து செல்வங்களையும் துறந்து, தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். இவர்கள் விட்டு சென்ற சென்றவற்றில் பெரும்பாலானவைகளை ஏழைகளுக்கு நல்ல முறையில் சென்றடைந்தது. நகரத்திற்கு சற்று வெளியே சென்று எழுவரும் கூடி வாழ்ந்து, இறைப்பணியையும் சமுகப்பணியையும் செய்ய ஆரம்பித்தனர். ஆனால், அவர்களின் ஆன்மீக தாகம் அடங்கவில்லை. எனவே, நகரத்திலிருந்து சுமார் 18 கி.மீ. இருக்கும் செனாரியோ என்கிற மலைக்கு ஏறி சென்று தவ வாழ்வை மேற்கொண்டார்கள். இந்த மலையில், இறைவனோடு உறவாட இயற்கை மிகவும் உதவியாக இருந்தது. மேலும், இவர்கள் ஒருவரை ஒருவர் முழுமையாக அறிந்து கொள்வதற்கும், சகோதர உறவை அடிப்படையாக கொண்ட ஒரு ஆன்மிக வாழ்வை உருவாக்குவதற்கும் இந்த மலை தகுந்த இடமாக அமைந்தது. இவர்களின் இந்த சகோதர ஆன்மிகத்தை கண்டு வியந்த மக்கள், இவர்களை சந்திக்க தொடர்ந்து மலை ஏறி வர ஆரம்பித்தார்கள். ஆன்மிகத்தில் இவ்வாறு முதிர்ச்சி அடைந்தபின், சமூகப்பணி செய்வதும் மிக அவசியம் என்பதை உணர்ந்து, மலையிலிருந்து கீழே இறங்கி வந்து, நோயுற்றோருக்கு சேவை செய்ய ஆரம்பித்தனர். இவர்களின் ஆன்மிக மற்றும் சமுகப்பணியை கண்டு பல இளைஞர்களும், மரியின் ஊழியர் குடும்பத்தில் சேர்ந்தனர். விரைவாகவே, பிளாரென்ஸ் நகரில் மட்டுமல்ல, அதைச் சுற்றி இருந்த பல ஊர்களிலும் நமது குடும்பம் விரிந்தது. இந்த நேரத்தில், சபை தொடர்ந்து பணி செய்வதற்கு பல தடைகள் வந்தாலும், நமது புனித தந்தையர்கள் இறைஞானத்தோடு அதை அணுகினர். இதனால் தான், ஒரு புறம் பல தடைகள் வந்தாலும், சகோதர அன்பை அடிப்படையாக கொண்ட இந்த ஆன்மிக குடும்பத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாய்க்கொண்டே இருந்தது குறிப்பிடத்தக்கது. பல இன்னல்களை தாண்டி 1304 ஆம் ஆண்டு திருத்தந்தை 11 ஆம் ஆசிர்வாதப்பர் தும் லேவாமூஸ் என்கிற மடல் மூலம் சபை நிரந்தரமாக அங்கீகரித்தார். அப்போது புனித அலெக்சிஸ் (எழுவரில் ஒருவர்) மட்டுமே உயிரோடு இருந்தார். அவர் பிப்ரவரி 17, 1310 அன்று கிட்டத்தட்ட 110 வயதில் இறந்தார். நமது ஏழு தந்தையர்கள் பல புனிதர்களை தங்களுடைய வாழ்நாளில் உருவாக்கியுள்ளனர். ஆனால், அவர்களுக்கு புனிதர் பட்டம் தாமதமாகவே கொடுக்கப்பட்டது. ஏனேனில், நமது மரியின் ஊழியர் குடும்பம், ஏழு தந்தையர்களையும் ஒருவராக கருதி புனிதராக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தபோது, அதற்கான வழி திருஅவையில் இல்லாதால், பல வருடங்கள் கழித்து, 1888 இல் திருத்தந்தை எட்டாம் சிங்கராயர் ஏழு தந்தையர்களையும் ஒன்றாக புனிதர்களாக அறிவித்தார். அவர்களின் கல்லறை செனாரியோ மலையில் உள்ளன.







நான்காம் ஓவியத்தில் அவரின் இறப்பு நிகழ்வும் புகழ்பெற்ற ஓவியரான பெர்னார்தினோ புங்காயால் மரப்பலகையின் மீது ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.

ஆலய கட்டிட பணிகள் மெதுவாக நடைபெற்றன. ஆலய பணிகள் நிறைவுற ஏறக்குறை மூன்று நூற்றாண்டுகள் ஆயின. பதினைந்தாம் நூற்றாண்டு மத்தியில் ஆலயத்தின் மையப்பகுதியும், அதன் இருபுறமும் அமைந்துள்ள சிற்றாலயங்களும் கட்டி முடிக்கப்பட்டன. கி.பி. 1427 - கி.பி. 1528 காலகட்டத்தில் கோதிக் கட்டிட கலையில் மூன்று பகுதிகளைக் கொண்ட இந்த மையப்பகுதியான கட்டப்பட்டது. பல்தசார் பெருச்சியின் வடிவமைப்பில் புகழ்பெற்ற கட்டிட கலை நிபுணர் வெந்தூரா துராப்பில்லி இந்த ஆலயத்தை கட்டினார். ஆலயத்தின் மையத்தில் உள்ள மிகப்பெரிய தூண்கள் இந்த ஆலயத்தின் அழகிற்கு மெருகூட்டுகின்றன.



**திருப்பயணம் தொடரும்...........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## எஸ்ரா, நெகேமியா



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 4 |
| | 5 | | | | | | | 8 | |
| | | 9 | | | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 13 | | | |
| | | 10 | | | | | 11 | | |
| | 6 | | | | | | | 7 | |
| 2 | | | | | | | | | 3 |

**வலமிருந்து இடம்**

3) நாங்களோ அரண்மனை உப்பைத் தின்பதாலும், மன்னரின் இழிவைப் பார்ப்பது முறையற்றது

………….. நாங்கள் மன்னருக்கு இதை அனுப்பித் தெரிவித்துக்கொள்கின்றோம்.

4) ஆண்டவரே, உம் ஊழியனான அடியேனின் மன்றாட்டையும், உமது பெயருக்கு அஞ்சி நடக்க விரும்பும் உம் ஊழியர்களின் மன்றாட்டையும் கேட்டருளும்: உம் ஊழியனாகிய எனக்கு இன்று வெற்றியை …………..

7) மேலும் யூதா நாட்டில் ஆளுநராய் இருக்குமாறு அர்த்தக்சஸ்தா என்னை நியமித்த நாள்முதல், அதாவது …… ஆட்சியின் இருபதாம் ஆண்டுமுதல் முப்பத்திரண்டாம் ஆண்டுவரை, ஆக இப்பன்னிரண்டு ஆண்டுகளாய், நானும் என் சகோதரரும் ஆளுநர்களுக்குரிய படியை வாங்கி உண்ணவில்லை

8) அவர்கள்முன் கடலைப் பிளந்தீர்: என்வே, ……….. நடவே உலர்ந்த தரையில் அவர்கள் கடந்து போனார்கள். அவர்களைப் பின்தொடர்ந்தவர்களையோ கல்லைப் போன்று ஆழ்கடலின் பாதாளத்திற்குள் வீழ்த்தினீர்!

13) அப்பொழுது, இறைவாக்கினர் ………. இத்தோ மகன் செக்கரியாவும், யூதாவிலும் எருசலேமிலும் வாழ்ந்த யூதருக்கு இஸ்ரயேலின் கடவுள் பெயரால் இறைவாக்கு உரைத்தனர்.

**இடமிருந்து வலம்**

1) பாரசீக மன்னர் சைரசு கூறுவது: விண்ணகக் கடவுளான ஆண்டவர் மண்ணகத்திலுள்ள எல்லா ………. என்னிடம் ஒப்படைத்துள்ளார்: மெலும் யூதாவிலுள்ள எருசலேமில் தமக்கென ஒரு கோவிலைக் கட்டும்படி அவர் என்னை நியமித்துள்ளார்.

2) மன்னர் அர்த்தக்சஸ்தாவின் ………… ஆட்சி ஆண்டில், நீசான் மாதத்தில் அவரது முன்னிலையில் திராட்சை இரசம் வைக்கப்பட்டிருந்தது.

5) மன்னர் தாரியு …….. ஆறாம் ஆண்டிலே, அதார் திங்கள் மூன்றாம் நாளிலே, கோவில் வேலை நிறைவுற்றது.

6) அவர்கள் ஆண்டவரைப் புகழ்ந்து நன்றி கூறி அவர் நல்லவர் ஏனெனில், அவர் இரக்கம் இஸ்ரயேல்மீது என்றென்றும் ………. என்று பாடினர்.





இயேசு தனது சோதனைகளுக்கு முன்பும் சரி, சோதனைகள் மத்தியிலும் சரி, சோதனைகளின் முடிவிலும் சரி தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்டார் என்கிறது விவிலியம். தூய ஆவியின் வல்லமை அவரை சோதனைகளின் மீது வெற்றிகொள்ள செய்தது. நாமும் இத்தவக்காலத்தில் தூய ஆவியாரின் ஏவுதல்களுக்கும், உந்துதல்களுக்கும் திறந்த மனதுடன் செவிகொடுத்து சோதனைகள் மீது வெற்றிகொள்ள இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

***முதல் வாசக முன்னுரை***

இஸ்ரயேலரின் நம்பிக்கை அறிக்கை எனக் கூறப்படும் வாசகங்களுள் இன்றைய முதல் வாசகமும் ஒன்று. இஸ்ராயேல் மக்கள் துன்பத்திலும், சிறுமையிலும், துயரத்திலும்தான் ஆண்டவரின் உதவியையும், வலிமையும், அருஞ்செயல்களையும் நாடினர். எங்கெல்லாம் கண்ணீர் கசிகிறதோ அங்கெல்லாம் கடவுள் இருக்கிறார். நாமும் நம்முடைய துன்ப நேரங்களில் இறைவனை நோக்கிக் கூக்குரல் எழுப்பும் போது நமக்கும் அவர் செவிசாய்ப்பார் என்ற நம்பிக்கையை நம்மில் விதைக்கும் இவ்வாசகத்தை வாசிக்கக் கேட்போம்.

***இரண்டாம் வாசக முன்னுரை***

ஒருவன் மீட்பு பெற வானத்தை அளக்க வேண்டியதில்லை, கடலைத் தாண்ட வேண்டியதில்லை. மாறாக, கடவுளுடைய கட்டளைகளை அனுசரித்தாலே போதும் என்பது இணைச்சட்டத்தின் போதனை. அக்கட்டளைகள் உதட்டிலும் உள்ளத்திலும் இருக்க வேண்டும் என்றும் அதே நூல் நமக்கு கூறுகிறது. எனினும் யூதர்கள் சட்டங்களின் உட்பொருளை மறந்து வெளித்தோற்றத்திலேயே கவனம் செலுத்தினர். புனித பவுல் அடிகளார் கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் நிறைவு. எனவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் என்ற உண்மையை உரக்கக் கூறுகிறார். வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

***மன்றாட்டுக்கள்***

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர்கள் அனைவரும் தொடங்கியிருக்கும் இந்த அருளின் காலத்திலே உமது அன்புக் கட்டளையை வாழ்வாக்கி உமது இரக்கத்தையும் அன்பையும் நிறைவாக பெற்று மனமகிழ்வோடு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உமது பிரசன்னத்தை எங்களுக்கு அனுதினமும் வெளிப்படுத்தும் இறைவா! எங்களது துயரம் நிறைந்த நேரத்திலும், நம்பிக்கை இழந்த நேரங்களிலும் நீர் எங்களோடு இருக்கிறீர் என்பதை உணர்ந்து மனவலிமையோடு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. சோதனைகளை சாதனைகளாக மாற்ற வல்லமை அளிக்கும் இறைவா! எங்களது நம்பிக்கையின் பொருட்டு நாங்கள் எங்கள் வாழ்வில் சந்திக்கின்ற சோதனைகளைக் கண்டு துவண்டுவிடாமல் எல்லா சோதனைகள் மீதும் உமது வார்த்தையின் துணைக்கொண்டும் தூய ஆவியாரின் துணையாலும் வெற்றியடைய அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா! பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளும் நன்றாக படித்து நல்லதொரு எதிர்காலத்தினை அவர்கள் பெற்று சிறப்பாக இச்சமுதாயத்தில் வாழ்ந்திட அவர்களுக்குத் தேவையான உமது அருள் வரங்களை நிறைவாகப் பொழிந்து வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

விலக்கப்பட்ட மரத்தின் கனியை தின்றால் சாவீர்கள் என்ற உருவகம் இறைவனின் கட்டளையை மீறுவோர் தண்டனைக்குள்ளாவர் என்ற உண்மையை உணர்த்துகிறது. பாவத்தின் விளைவு சாவு ஆனால் கிறிஸ்துவின் மரணம் உயிர்ப்பு வழியாக இச்சாவின் மீது நாம் வெற்றி கொண்டுள்ளோம் என்ற உண்மையை இன்றைய இரண்டாம் வாசகம் உணர்த்துகிறது. எனவே இயேசுவுடன் இணைந்துள்ள நாம் மரணத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை மாறாக உயிர்ப்பின் மக்களாக வாழ இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. படைப்பின் நாயகனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைஞானத்தோடு செயல்படவும், உமது விருப்பத்தை மட்டுமே தங்கள் வாழ்வில் பேசவும் கூடிய அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. இரக்கத்தின் இறைவா! எமது நாட்டுத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் தேவையற்ற பேச்சை தவிர்த்து எல்லோருக்கும் நன்மை பயக்கின்ற செயல்களை செய்யவும் பேசவும் தேவையான இறையருளை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. கருணையின் ஊற்றே இறைவா! நாங்கள் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் எங்களது இயல்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை உணர்ந்து நல்லவற்றையும், பிறருக்கு பயன்தரக்கூடியவற்றையும் பேச எங்களுக்கு உமது அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா! நாங்கள் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து, பேச வேண்டிய இடத்தில் பேசவும், பேசக்கூடாத இடத்தில் மௌனம் காக்கவும் தேவையான இறைஞானத்தை நிறைவாக எங்களுக்குப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### தவக்காலம் முதல் ஞாயிறு (09-03-2025)
### இச 26:4-10; உரோ 10:8-13; லூக் 4:1-13

## திருப்பலி முன்னுரை

தவக்காலம் இறை இரக்கத்தின் காலம், இறைவன் நம் அருகில் இருக்கிறார் என்பதை உணர்த்தும் காலம், நாம் இறைவனிடம் திரும்பி வருவதற்கு ஏற்ற காலம். மேலும் தவக்காலம் மனமாற்றத்தின் காலம், புதுவாழ்வை மனதிற்குள் கொணர வேண்டிய காலம் ஆகும். தவக்காலத்தின் முதல் ஞாயிறாகிய இன்று நமது வாழ்வில் வருகின்ற சோதனைகள் மீது வெற்றி கொண்டு மனமாற்றம் பெற்று ஒரு புதிய வாழ்வுக்கு அழைப்பதாக இன்றைய திருவழிபாடு அமைகின்றது.

ஒரு மனிதனின் வாழ்வில் வரும் சோதனைகள், அம்மனிதன் எந்த அளவிற்று பற்று, பாசம் முதலியவற்றைக் கடந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாக இருக்கிறான் என்பதை சுட்டிக்காட்டுகின்றன. சோதனைகள் எல்லா மனிதருடைய வாழ்விலும் வருகின்றன. சோதனைக்குள்ளாகின்ற எல்லா மனிதர்களும் வீழ்ந்துவிடுவதில்லை. சோதிக்கப்படுவது என்பது வேறு, சோதனையில் வீழ்வது என்பது வேறு என்கிறார் சேக்ஸ்பியர். இத்தகைய சோதனைகள் இஸ்ராயேல் மக்கள் வாழ்விலும் இயேசுவின் பணிவாழ்விலும் எவ்வாறு நடந்தேறின என்பதை சிந்திக்கத் தூண்டுகிறது இன்றைய இறைவார்த்தை.





9) எங்கள் நிலத்தின் முதற் பலனையும் எல்லா மரங்களின் முதற் கனிகளையும் ……… ஆண்டவரின் இல்லத்திற்குக் கொண்டு வர நேர்ந்து கொண்டோம்.
10) பின்பு, எஸ்ரா, கடவுளது இல்லத்தின் முகப்பினின்று எழுந்தார்: எலியாசிபின் மகனான யோகனானின் ……….. சென்றார். அங்கே உணவு உண்ணாமலும், தண்ணீர் குடிக்காமலும் இருந்தார். ஏனெனில், அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்தவர்களின் நேர்மையின்மையின் பொருட்டுப புலம்பி அழுது கொண்டிருந்தார்.
12)கட்டுபவர்கள் ஆண்டவரின் கோவிலுக்கு அடித்தளம் இட்டபோது இஸ்ரயேலின் அரசர் தாவீது உரைத்தபடி குருக்கள் தங்களுக்குரிய ஆடை அணிந்துகொண்டு, எக்காளத்தோடும்,………. புதல்வரான லேவியர் கைத்தாளங்களோடும் ஆண்டவரைப் புகழ்ந்தனர்.

**மேலிருந்து கீழ்**

1) இருப்பினும், நீங்கள் என்னிடம் திரும்பிவந்து என் கட்டளைகளைப் பின்பற்றி நடப்பீர்களாகில் நீங்கள் உலகின் கடை எல்லைக்கு ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பினும், ………. உங்களை ஒன்று சேர்த்து எனது பெயர் விளங்கும் பொருட்டு நான் தேர்ந்துகொண்ட இடத்திற்கு உங்களைக் கொண்டுவருவேன்.
4) ஆகவே இப்பொழுது மன்னர் விரும்பினால் பாபிலோனில் உள்ள தமது கருவூலத்தில் தேடிப்பார்க்கட்டும். எருசலேமில் கடவுளுக்குக் கோவில் கட்டச் சைரசு மன்னர் கட்டளை கொடுத்திருக்கின்றாரா என்பதை ……… இதைக் குறித்து மன்னர் தம் விருப்பத்தை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகின்றோம்.
5) மன்னர் அவர்தம் ஆலோசகர் ஆற்றல்மிகு அரசு அதிகாரங்கள் ……… பார்வையில் தயவுகிடைக்கும்படி செய்தவர் அவரே! என் கடவுளான ஆண்டவரின் அருள்கரம் என்னோடு இருந்ததால், நான் திடம் கொண்டு, இஸ்ரயெலின் தலைவர்களை ஒன்று சேர்த்து அவர்களை என்னோடு அழைத்துவந்தேன்.
8) மேலும், எங்களது முதல் பிசைந்த மாவையும், எங்கள் படையல்களையும், ஒவ்வொரு மரத்தின் கனிகளையும், திராட்சை இரசம், எண்ணெய் முதலியவற்றையும் குருக்களுக்காக, நம்
……….. கோவில் அறைகளில் கொடுப்போம்
9) குருக்களில், எலியாக்கிம், மாசேயா, மின்யமின், மீக்காயா, எலியோனாய், செக்கரியா, அனனியா, ………. எக்காளம் தாங்கி இருந்தனர்.
12) அவர்களிடம் நிறுத்துக் கொடுத்தவை: இருபத்தாறு டன் நிறைவுள்ள வெள்ளி: நாலாயிரம் கிலோகிராம் நிறைவுள்ள வெள்ளிப் பாத்திரங்கள்: ……….. பொற்காசு! மதிப்புள்ள இருபது பொற் கிண்ணங்கள்:

**கீழ்ருந்து மேல்**

2) கட்டுபவர்கள் ஆண்டவரின் கோவிலுக்கு அடித்தளம் ………. இஸ்ரயேலின் அரசர் தாவீது உரைத்தபடி குருக்கள் தங்களுக்குரிய ஆடை அணிந்துகொண்டு, எக்காளத்தோடும், ஆசாபின் புதல்வரான லேவியர் கைத்தாளங்களோடும் ஆண்டவரைப் புகழ்ந்தனர்.
3) அவர்கள் ……… ஒன்று சேர்ந்து எருசலேமின்மீது போர் தொடுக்கவும், அங்கே கலகத்தை உருவாக்கவும் சதி செய்தனர்.
6) இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவரே! நீர் நீதியுள்ளவர். ஏனெனில், இன்று நாங்களே எஞ்சியுள்ளோராய் விடப்பட்டிருக்கிறோம். இதோ நாங்கள் ……… குற்றவாளிகளாய் இருக்கிறோம். இதனால் எங்களில் யாரும் உம்முன் நிற்க இயலாது.
7) ………. ஐம்பத்திரண்டு நாள்களுள் கட்டப்பட்டு எலூல் மாதம் இருபத்தைந்தாம் நாளில் நிறைவடைந்தது.
10) வேற்றினத்தார் அனைவரிடமிருந்தும் அவர்களைத் தூய்மைப்படுத்தினேன். குருக்களுக்கும் லேவியருக்கும்…………அவர்களுக்குரிய வேலையைக் கொடுத்து பணிமுறைமைகளை அமைத்தேன்.
11) எம் முன்னோர் காலமுதல் இதுவரை நாங்கள் பெரும் பாவம் செய்துள்ளோம். எங்கள் பாவங்களினால், நாங்களும் எங்கள் அரசர்களும்……… வேற்று நாட்டு மன்னர்களின் கைக்கும், வாளுக்கும் அடிமைத்தனத்திற்கும் கொள்ளைக்கும் வெட்கக் கேட்டுக்கும் இதுவரை ஒப்பவிக்கப்பட்டோம்.
13)………. மகனான மல்கியாவும், பகத்மோவாபின் மகனான அசுபும் மற்றொரு பகுதியையும் சூளைக்காவல் மாடத்தையும் பழுது பார்த்தனர்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-02-2025

# வியப்புக்குரிய அன்னையே

21



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

வறுமையில் உழன்றாலும் - வீண்
பெருமையைப் பேசுவது
சிறியது என்றாலும் - ஊதிப்
பெரியதாய் ஆக்குவது
சுற்றத்தார் யாரையும் - எப்போதும்
குற்றம் சொல்லுவது
புறம் பேசியே – தங்களது
நேரம் கழிப்பது
தனது பிடியை – விடாது
அடம் பிடிப்பது
செல்லும் இடங்களில் - தன்னை
மட்டும் முன்னிறுத்துவது
நிறைகள் இருந்தாலும் - அதனுள்
குறைகள் காண்பது
சுண்டைக்காய் விஷயம் - என்றாலும்
சண்டைப் போடுவது
காரணமே இல்லாமல் - கொடும்
கோபம் கொள்வது
தவறு நேரின் - பிறனில்
பழிப் போடுவது
இவை யாவுமே – பெண்களின்
இயல்பு தானே!
வழிவழி வருகின்ற – தட்டாத
மரபு தானே!
இவற்றில் ஒன்றுகூட – அன்னை
மரியிடம் இல்லையே! – ஆதலின்
வியப்புக் குரியர் தானே!
மறுப்பவரும் இல்லை தானே!
வியப்புக் குரிய அன்னையே!
எங்களுக்காக மன்றாடுவீர்





3. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டுங்கள் என்று மொழிந்தவரே எம் இறைவா! உமது பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை மனதார மன்னிக்கவும், உம்மால் அருட்பொழிவு செய்யப்பட்டவர்களை உதாசினப்படுத்தாமல் மதித்து வாழவும் உமது அருளையும் ஆசியையும் எங்களுக்குப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா! கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டுள்ள உம் மக்கள் விரைவில் சுகம் பெறவும் இந்த பெருந்தொற்றானது மனிதர்களிடமிருந்து முழுமையாக அகற்றப்படவும் இதனால் மனிதர்கள் அனைவரும் நலத்தோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 8 ஆம் ஞாயிறு (02-03-2025)
### சீரா 27:4-7; 1கொரி 15:54-58; லூக் 6:39-45

### திருப்பலி முன்னுரை

நாம் பேசும் வார்த்தைகளைக் குறித்து கவனமாய் இருக்க இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய கருத்துக்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம். பேச்சு என்ற ஒன்று மட்டும் இல்லையென்றால் மனித வாழ்வு மயானமாகத்தான் காட்சியளிக்கும். நாம் பேச முடிகின்ற காரணத்தினால்தான், நமது எண்ணங்களை, தேவைகளை, விருப்பங்களை, உணர்வுகளை பிறருக்கு எடுத்துச் சொல்ல முடிகிறது. இப்படிப்பட்ட மேலான கொடையாகிய பேச்சுத் திறமையை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என சிந்தித்துப் பார்க்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு நம்மை அழைக்கின்றது.

நாம் பேசுகின்ற பேச்சு பிறரது மனநிலையில் மட்டுமல்ல உடலில் கூட மாற்றத்தைக் கொண்டு வருகிறது என்பதை உளவியலில் ஒரு பிரிவு சுட்டிக்காட்டுகின்றது. பல வேளையில் துரதிஷ்டவசமாக நம்முடைய பேச்சின் வல்லமையை நாம் உணர்வதில்லை. நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் நமது இயல்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வெளிப்படையாக பார்க்கும்போது நல்ல வார்த்தைகள் நல்ல இயல்பிலிருந்தும், தீய வார்த்தைகள் தீய இயல்பிலிருந்தும் வெளிப்படுகின்றன என்று இயேசு கூறுகிறார். ஆகவே நாம் இறைவனோடு இணைந்திருக்கும் போது நமது சிந்தனை, வாழ்க்கை முறை, பேச்சு போன்ற அனைத்தும் நேர்மையானதாக இருக்கும். எனவே இறைஞானத்தோடு பேசிட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

வாழ்வின் பல்வேறு நிலைகள், சூழல்களை மனதில் வைத்து அறிவுரை கூறுவதாக சீராக்கின் ஞானம் அமைந்துள்ளது. ஒரு மனிதனை அவன் பேச்சு வெளிப்படுத்திவிடும். அவன் பேச்சிலிருந்து அவனது உள்ளத்தை அறிய முடியும் என்கிறது இன்றைய முதல் வாசகம். நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் நமது இயல்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை உணர்ந்து பிறருக்கு பயன் தருபவற்றையும், நல்லவற்றையும், நேர்மையான கருத்துக்களையும் பேச இறைஞானத்தை மன்றாடியவர்களாய் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**பொதுக்காலம் 7 ஆம் ஞாயிறு (23-02-2025)**
**1சாமு 26:2,7-9,12-13,22-23; 1கொரி 15:45-49; லூக் 6:27-37**

## திருப்பலி முன்னுரை

‘உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்; மன்னியுங்கள், மன்னிப்புப் பெறுவீர்கள்’ என்கிற உன்னதமான அழைப்பை இன்றைய திருவழிபாடு நமக்கு அளிக்கின்றது. கிறிஸ்துவின் பணி மீட்புப் பணி, ஒப்புரவுப் பணி. இயேசு வாழ்ந்த போது யூதா இனத்துக்கும் பிற இனத்துக்கும் இடையே நின்ற பகைமை என்னும் சுவரைத் தகர்த்து அவ்விரண்டு இனத்தையும் ஒரினமாக ஒப்புரவாக்கினார். கிறிஸ்து திருஅவையிடம் அதே ஒப்புரவுப் பணியை ஒப்படைத்துள்ளார். இன்றைய இறைவார்த்தை வழிபாடு நாம் நம் பகைவர்களையும் மன்னித்து அவர்களோடு ஒப்புரவாகும்படி அழைக்கின்றது.

நம் பகைவரை அன்பு செய்வதன் வழியாக நாம் கடவுளின் இயல்பில் பங்கெடுக்கிறோம். மேலும் நம் உள்ளத்தில் நிம்மதி நிரம்பி வழியச் செய்கிறது. எனவே நமது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் நம் பகைவர்களையும் நம்மை வெறுக்கின்றவர்களையும் அன்பு செய்து கடவுளின் சாயலில் பங்கு பெற்று வாழத் தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

சவுல் தன்னை கொல்ல தேடியும், தாவீது சவுலின் மீது இரக்கம் கொண்டு அவருடைய உயிரை பாதுகாக்கிறார். தாவீதின் மன்னிக்கும் குணத்தையும், இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டவருக்கு அவர் தரும் மரியாதையையும் இன்றைய முதல் வாசகம் வெளிப்படுத்துகிறது. தாவீதைப் போல நாமும் நம் பகைவர்களை மன்னிக்கவும், அருட்பொழிவு செய்யப்பட்டவர்களை மதித்தும் வாழ வரம் வேண்டி இன்றைய முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆதாம் மண்ணைச் சார்ந்தவர், கிறிஸ்துவோ விண்ணைச் சார்ந்தவர். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆதாமின் சாயலை மட்டுமல்ல, கிறிஸ்துவின் சாயலையும் தாங்கியவர்கள். ஆதாமின் மனித இயல்பு பழிவாங்கும் இயல்பு, கிறிஸ்துவின் தெய்வீக இயல்பு மன்னிக்கும் இயல்பு. நாம் நமது பகைவர் மட்டில் பொறுமைமிக்கவர்களாக செயல்பட்டு, அவர்களுக்கு தீமைக்குப் பதிலாக நன்மை செய்ய ஆரம்பிக்கும்போது நாமும் நம்மில் உள்ள இறைஇயல்பை வெளிப்படுத்துகிறோம். எனவே தூய ஆவியால் வழிநடத்தப்பட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. வழிகாட்டும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் அன்புக் கட்டளையை வாழ்வாக்கி சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்க அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
2. பகைவரையும் மன்னித்து அன்பு செய்ய எங்களை அழைக்கும் எம் இறைவா! நாங்கள் அனைவரும் எங்களது பகைவர்களை அன்பு செய்யவும், எங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யவும் அதன் வழியாக உமது இறைஇயல்பில் பங்கு பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 5 ஆம் ஞாயிறு (09-02-2025)**
**எசா 6:1-8; 1கொரி 15:1-11; லூக் 5:1-11**

## திருப்பலி முன்னுரை

அழைப்பு என்பது ஓர் ஆன்மீகத்தின் ஆணிவேர். இந்த ஆணிவேர்தான் இன்று திருஅவையைக் கட்டிக்காக்கக் கூடிய பக்க வேர்களாக ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும் மற்றும் பொதுநிலையினரையும் உருவாக்கித் தந்திருக்கின்ற மாபெரும் சக்தியாக விளங்குகிறது. இறையழைத்தல் என்பது எதிர்பாராத ஒரு நிகழ்வு. இறையழைத்தலானது இறைவிருப்பத்துடன் எவர் வேண்டுமானாலும் பெறக்கூடிய ஓர் அழைப்பு. ஏழை, எளியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரரு என இறைவன் ஆள் பார்த்து, பாரபட்சம் காட்டி செயல்படுவதில்லை. இறைவிருப்பத்தை நாடும் ஒவ்வொருவரையும் இறைவன் அழைக்கிறார். தகுதியற்றவர்களை அடையாளம் கண்டு தகுதியானவர்களாக மாற்றுகின்றார். எனவேதான் திக்குவாயான மேசேயும், ஒழுங்குமுறைத் தவறிய தாவீதும் கூட இறையழைத்தலுக்குத் தகுதியாளராயினர்.

, i w t þggNk , i w mi ojjyhf pW . ‘எனவேதான் நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை மாறாக, நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்’ என்று இயேசு கூறுகிறர். இறைவன் யாரை தேர்வு செய்தாரோ அவர்களை தகுதியுள்ளவர்களாக மாற்றுகின்றார். தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான் என்று சொன்ன எசாயாவை, பாபிலோனில் அடிமையாக இருந்து இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலை செய்தியை அறிவிக்க அனுப்புகிறார். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன் என்று சொன்ன புனித பவுலை புறவினத்தாரின் திருத்தூதராக அனுப்பப்பட்டார். ஆண்டவரே, நான் பாவி என்று சொன்ன பேதுருவை மனிதர்களை பிடிப்பவர்களாக மாற்றினார். ஆக எல்லாம் இறைவிருப்பத்தினால் நடைபெறுகிறது. எனவே நாமும் இறைவிருப்பத்தை அறிந்து இறைவனது அழைப்புக்கு உட்பட்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இறையழைத்தல் என்பது சமுதாயத்தில் ஒரு நபருக்கு இருக்கக்கூடியத் தகுதியையும், கௌரவத்தையும் பொறுத்து அல்ல, மாறாக இறைவனின் விருப்பத்தையும், பேரிரக்கத்தையும் பொறுத்தது. எனவே தான் எசாயா தன்னைத் தகுதியற்றவரென இறைவனிடம் உரைத்தபோதும் இறைவன் அவரைத் தூய்மைப்படுத்தி தகுதியுள்ளவராக்குகிறார். இறைவாக்கினர் எசாயாவும் இறைப்பணிக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் அந்நிகழ்வை இவ்வாசகத்தில் வாசிக்கக் கேட்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்களைக் கொன்று குவிப்பதற்காகத் தமஸ்கு நகருக்குச் சென்று கொண்டிருந்த சவுலை உயிர்த்த இயேசு தன் பணிக்கென அவரை அழைத்தார். அவரும் இன்றைய வாசகத்தில் தனது தகுதியின்மையை எடுத்துரைக்கிறார். எனவேதான், திருத்தூதர்களிலெல்லாம் கடையனாகத் தன்னை வெளிப்படுத்துகிறார். இறைவனின் அருளும் ஆசியும் எத்தகையவரையும் மாற்றம் பெற வைக்கிறது. இறைப்பணிக்கென அவர்களைத் தகுதி படைத்தவராகவும் மாற்றுகிறது என்கின்ற உண்மையை வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர்கள் தங்களது இறையழைத்தலில் நிலைத்து நின்று அழைத்த உமது விருப்பத்தை முழுமையாகத் தங்கள் வாழ்வில் செயல்படுத்தத் தேவையான இறைஞானத்தையும் இறையருளையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்களையெல்லாம் படைத்து பராமரிக்கும் இறைவா! உமது இறைப்பணிக்கென சாதாரண மனிதர்களை திருமுழுக்கினால் புதுப்படைப்பாக மாற்றினீர். நாங்களும் எங்களது தகுதியின்மையை உணர்ந்து, உமது அருளில் நம்பிக்கைக் கொண்டு உமக்கு உரியவர்களாக வாழ எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உம் ஆவியால் எங்களுக்கு புத்துயிர் அளிக்கும் இறைவா! இறைவாக்கினர் எசாயா, பவுல் மற்றும் பேதுருவைப் போல நாங்களும் எங்களது தனிப்பட்ட பாவங்களையும், பாவச் சூழ்நிலைகளையும் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு மனமாற்றம் பெற்று உம்மில் வாழ எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. இறையழைத்தலின் பிறப்பிடமே இறைவா! இறை அழைத்தலின் அத்தியாவசியத்தையும் அவற்றின் மேன்மையையும் கிறிஸ்தவ குடும்பங்கள் அனைத்தும் உணர்ந்தருளவும் குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் உணர்ந்து இறைபணிக்கெனத் தங்களையும், தங்களது பிள்ளைகளையும் அர்ப்பணிக்கக்கூடிய மனநிலையை தூய ஆவியாரின் வழியாக அவர்களைத் தூண்டியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 6 ஆம் ஞாயிறு (16-02-2025)

## எரே 17:5-8; 1கொரி 15:12,16-20; லூக் 6:17, 20-26

### திருப்பலி முன்னுரை

நம்பிக்கையில்தான் உலகம் இயங்குகிறது. ஓட்டுநரை நம்பி நாம் பேருந்துகளில் பயணம் செய்கிறோம்; சமையல்காரரை நம்பி நாம் உணவகம் செல்கிறோம். எனவே நம்புவது தவறில்லை. ஆனால் திருப்பாடல் 118:8 கூறுகிறது, ‘மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம். இறைவனை நம்பி சரண் அடைபவன் நீர் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பாவான்’ என்று. இவ்வுகு காட்டும் வழியைப் பின்பற்றினால் நிலையற்ற செல்வம் கிடைக்கலாம். ஆனால் கடவுள் காட்டும் வழியை பின்பற்றனால் நிலையான செல்வம் கிடைக்கும். அனைத்து பொருட்களும் மனித மேம்பாட்டிற்காகவே படைக்கப்பட்டுள்ளன. பொருளைத் தேடி, வருவாயைப் பெருக்கி, குடும்பத்தைப் பேணுவது குடும்பத் தலைவரின்





கடமை. ஆனால் இவ்வுலகப் பொருள்களையே தமது குறிக்கோளாகக் கொண்டு, அவற்றை கடவுளாக வழிபடுபவன் பாலைவனப் பூண்டிற்கு சமம்.

மனிதருக்குப் பொருளும் வேண்டும்; அருளும் வேண்டும். பொருளில்லாதவர்கள் இவ்வுலக இன்பங்களைத் துய்க்க முடியாது. அருளில்லாதவர்கள் மறுமைப் பேரின்பத்தைப் பெற முடியாது. பொருளைத் தேடி அலையும் நாம் அருளுக்கு முதலிடம் கொடுத்தால் மற்றனைத்தும் சேர்த்து நமக்குத் தரப்படும் என்ற உறுதிமொழியை கடவுள் இன்று நமக்குத் தருகிறார். எனவே உலக உறவுகளின் மேலும் உலகச் செல்வங்கள் மீதும் நம்பிக்கை வைப்பதைவிட இறைவன் மீது நம்பிக்கை கொண்டு இறையருளைத் தேடுவோம். அதற்கான இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

இஸ்ராயேல் மக்கள் தம் உடன்படிக்கையின் கடவுளை மறக்கவும் மறுக்கவும் தொடங்கியபோது எரேமியா இறைவாக்கினர் தோன்றி அவர்களை எச்சரிக்கின்றார். அவர்கள் தங்களது படைபலத்திலும், வேற்று அரசர்களின் வலிமையிலும் நம்பிக்கை கொண்டனர். இதை விடுத்து இறைவனில் நம்பிக்கை கொள்ளும்படி அழைப்பு விடுக்கின்றார். மனிதரில் நம்பிக்கை வைப்போர் சபிக்கப்பட்டவர், ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர் எனக்கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் உயிர்ப்பு நம் விசுவாசத்தின் ஆணிவேரும் அச்சாணியுமாக இருக்கின்றது. உயிர்ப்பு வாழ்வில் நமக்குள்ள நம்பிக்கை, இயேசுவின் உயிர்ப்பிலே ஊன்றி நிற்கின்றது. இயேசுவின் உயிர்ப்பு, பொய்மையைவிட உண்மையே சக்திமிக்கது, நன்மை தீமையை வென்றது, அன்பு பகைமையை ஆட்கொண்டது என்ற உண்மையை உணர்த்தும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் ஆயனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களது அனுதின வாழ்வில் உம்மீது நம்பிக்கை கொண்டு உம்மில் தஞ்சம் புகுந்து உமது அருளை நிறைவாகப் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! நாங்கள் உலக உறவுகளுக்கும் உலக செல்வங்களுக்கும் அடிமையாகாமல், உமது அருளை நாங்கள் தேடவும், நாங்கள் கொண்டிருக்கும் செல்வங்களை ஏழைகளோடு பகிர்ந்து வாழவும் அதன் வழியாக உமது மீட்பை பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உயிர்ப்பும் உயிரும் நானே என்று மொழிந்த எம் இறைவா! உமது உயிர்ப்பிலே விசுவாசம் கொண்டு வாழும் நாங்கள் அனைவரும் உண்மையும், நன்மையும், அன்பும் நிறைந்த மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. எங்கள் துன்பங்களில் துணைவருபவரே எம் இறைவா! உமது மதிப்பீடுகளைப் பின்பற்றுவதால் வரும் துன்பங்களைக் கண்டு கவலையுறாமல் எமது துன்பங்கள் பிறருடைய மீட்புக்கு உதவுவன என்பதை உணர்ந்து துன்பங்களை இன்முகத்துடன் ஏற்று வாழத் தேவையான வலிமையையும் ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.